# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அம்பாசமுத்திரம்
# திருநெல்வேலி மாவட்டம்

## முன்னிலை: திரு.ப.பிரவீன் ஜீவா., பி.ஏ.,பி.எல்.,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அம்பாசமுத்திரம்.

**2026 ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 11–ம் நாள், வெள்ளிக்கிழமை**

**இ.ம.எண்.3/2026**
**உள்**
**அசல் வழக்கு எண்.83/2025**

(CNR No.TNTL0D-000112-2025 )

1. புனித சவேரியார் ஆலயம் ராமலிங்கபுரம்
   அதன் நிர்வாகி திரு.அருள்ராஜ் மூலம்.
2. திரு.அருள்ராஜ் ... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர் /

1. திரு.ஆபிரகாம் பாக்கிய செல்வன்
2. திரு.தங்கையா என்ற ஸ்தன்னிஸ்லாஸ்
3. திருமதி.கேத்தரின்
4. திரு.ஞானஜெபமணி
5. திரு.மரியபீட்டர்ராஜ்
6. திரு.சார்லஸ் பாக்கியநாதன் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுக்களானது கடந்த 7.9.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, **மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.மு.மகேஷ்** அவர்கள் ஆஜராகியும், **எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.ஆரோக்கியராஜ்** அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 8 விதி 3(A)ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனுவின் சுருக்கம்</u>:–**

இவ்வழக்கில் வாதி தரப்பில் முதல்நிலை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளார். வாதி தரப்பு கட்சியை ருசு செய்ய சில முக்கியமான ஆவணங்கள் தற்போது தேடிபார்த்து தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆவணங்களை வழக்கிற்கு உதவக்கூடியவை ஆகும். எனவே, மேற்படி ஆவணங்களை குறியீடு செய்ய அனுமதியளிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. <u>1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 2 முதல் 6 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>:–**

மனுவில் சொல்லியுள்ள விபரங்கள் தவறானது. மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு உருவாக்கப்பட்ட ஆவணங்கள் ஆகும். மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்வதற்கு சரியான காரணங்கள் எதுவும் மனுவில் சொல்லப்படவில்லை. மனுதாரர் திருச்சபையின் நிர்வாகியோ அல்லது சட்டப்பூர்வ பிரதிநிதியோ அல்ல. மேலும், திருச்சபையின் தொடர்பான ஆவணங்களை உருவாக்கவோ அல்லது அவற்றை சார்ந்திருக்கவோ மனுதாரருக்கு உரிமை இல்லை. எனவே, மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. இம்மனுவில் தீர்மானிக்கபட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனுவில் உள்ள ஆவணங்களை குறியீடு செய்ய அனுமதியளித்து உத்தரவிட வேண்டுமா? இல்லையா? என்பதே ஆகும்.**

<u>**தீர்வு**</u>

5. இருதரப்பு விவாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலினை செய்யப்பட்டது. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித சாட்சியமோ, சான்றாவணங்களோ தாக்கல் செய்யப்படவில்லை. மனு, அபிடவிட் மற்றும் எதிருரையில் சொல்லியுள்ள சங்கதிகளையொட்டியே மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர்கள் வாதிட்டார்கள்.

6. இந்நீதிமன்றமானது வழக்கு ஆவணங்கள், மனு அபிடவிட் மற்றும் எதிருரை சங்கதிகள் மற்றும் இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதம் ஆகியவற்றைப்

பரிசீலனை செய்தபோது, அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, வாதி தரப்பு சாட்சியத்தில் ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

7. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு உருவாக்கப்பட்ட ஆவணங்கள் என்றும், மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்வதற்கு சரியான காரணங்கள் எதுவும் மனுவில் சொல்லப்படவில்லை என்றும், மனுதாரர் திருச்சபையின் நிர்வாகியோ அல்லது சட்டப்பூர்வ பிரதிநிதியோ அல்ல என்றும், மேலும், திருச்சபையின் தொடர்பான ஆவணங்களை உருவாக்கவோ அல்லது அவற்றை சார்ந்திருக்கவோ மனுதாரருக்கு உரிமை இல்லை என்றும், எனவே, மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று ஆட்சேபிக்கப்பட்டுள்ளது.

8. மேலும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது, தாவா சொத்து சம்பந்தமான மின்கட்டண ரசீதுகள், திருவிழா அழைப்பிதழ், தவக்கால குறிப்பு அறிவிப்பு, இறை சமூக உறுப்பினர் பதிவேடு அட்டை ஆகிய ஆவணங்களானது அசல் வழக்கின் தீர்வுக்கு முக்கியமான ஆவணங்களாகும். மேலும், இவ்வழக்கில் உள்ள பிரச்சனையை தீர்ப்பதற்கு அவசியமான ஆவணம் என்பது தெரியவருகிறது. மேலும், இம்மனுவை அனுமதிப்பதினால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படபோவதில்லை.

**மேலும், மாண்புமிகு உச்சநீதிமன்றம் "பிபின் சாந்திலால் யாஞ்சால் எதிர் குஜராத் மாநில அரசு, 2001-3 SCC-1" என்ற முன்தீர்ப்பில்,**

**"ஒரு ஆவணத்தை குறியீடு செய்வதற்கு எதிர்தரப்பினர் ஆட்சேபனைகளை முன்வைக்கும்போது, அந்த ஆட்சேபனைகளை குறிப்பிட்டு அந்த ஆவணத்தை நீதிமன்றம் சான்றாவணமாக குறியீடு செய்யலாம் எனவும், அந்த ஆவணத்தின் ஏற்புடைமை, உண்மை தன்மை குறித்து இறுதி தீர்ப்பு வழங்கப்படும்போது, தீர்மானிக்கலாம் எனவும், அவ்வாறு தீர்ப்பளிக்கப்படும்போது, அந்த ஆவணத்தை ஏற்றுக்கொள்வதா?**

**இல்லை நிராகரிப்பதா? என்பதை தீர்மானிப்பதற்கான ஒரு வாய்ப்பு இறுதி தீர்ப்பு அளிக்கும்போதுதான் ஏற்படும்" என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.**

9. மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன்தீர்ப்பின் அடிப்படையிலும், மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்யக்கோரும் ஆவணங்கள் அசல் வழக்கினை தீர்வு செய்வதற்கு முக்கியமான ஆவணங்கள் என்பதாலும், அந்த வகையில், மேற்படி ஆவணத்த ஏற்றுக்கொண்டு வா.சா.1ன் மூலமாக குறியீடு செய்யக்கோரும் காரணமும் ஏற்றுக்கொள்ளும்படியாக அமைந்துள்ளது. எனவே, வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும் மனுதாரர்கள்/வாதிகளுக்கு அவரது வழக்கை நிரூபணம் செய்ய அவருக்கு ஒரு வாய்ப்பு அளிக்கும்பொருட்டு, மேற்படி ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**முடிவாக, இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Uploaded on 11.09.2026
PRAVEENJEEVA P
Digitally signed by PRAVEENJEEVA P
Date: 2026.09.11 17:34:17 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அம்பாசமுத்திரம்.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>:– இல்லை**

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>:–** இல்லை

Uploaded on 11.09.2026
PRAVEENJEEVA P
Digitally signed by PRAVEENJEEVA P
Date: 2026.09.11 17:34:24 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அம்பாசமுத்திரம்.

மு.மா.உ.நீ.அம்பை
இ.ம.எண்.3/2026
உள்
அ.வ.எண்.83/2025
நேரிய/வரைவு உத்தரவு
நாள்:11.9.2026.